இன்றைக்கு ஆசியாவிலேயே, அதிக முதலீட்டில் சுமார் 496 கோடி ரூபாய் செலவில், அதி நவீன வசதிகளுடன் ஒருங்கிணைந்த கால்நடை பூங்கா அமைப்பதற்கான அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிட்டதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். குடிமராமத்து மன்னர், காவேரி மீட்பு நாயகர், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) எனது கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வி. கூட்ரோடு பகுதியில் கால்நடை பூங்கா மற்றும் கால்நடைப் பண்ணை வளாகம் திறப்பதற்கு உத்தரவிட்டதற்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிவிப்பு

"காகிதமில்லா சட்டமன்றம்" எனும் இலக்கினை எய்திடும் வகையில் குழுக்களின் அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு மென்பொருள் வடிவில் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதம் இல்லா சட்டமன்றம்" என்ற நிலையினை உருவாக்க, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக, 2018-2019 ஆம் ஆண்டிற்கான, பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்று முதல் அறுபத்து ஆறு வரையிலான 4 அறிக்கைகள், பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்து மூன்று மற்றும் எழுபத்து நான்கு ஆகிய 2 அறிக்கைகள், அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பது முதல் ஐம்பத்து ஆறாவது வரையிலான 17 அறிக்கைகள், மனுக்கள் குழுவின் மூன்று முதல் ஆறு வரையிலான 4 அறிக்கைகள் மற்றும் பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முதலாவது அறிக்கை, ஆகியவற்றின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு

உறுப்பினர்களின் பார்வைக்காக, சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதென்பதையும், இவ்வறிக்கைகள் பேரவைக்கு அளிக்கப்பட்டவுடன், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், இதன் அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறாது என்பதனையும், மேல் நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு மின்னஞ்சல்மூலம் அனுப்பி வைக்கப்படும் என்பதனையும், பேரவையின் அனுமதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்து மூன்று முதல் அறுபத்து ஆறு வரையிலான 4 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018-2019 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய எழுபத்து மூன்று மற்றும் எழுபத்து நான்கு ஆகிய இரண்டு அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பில் தங்கள் அனுமதியோடு பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, அரசு உறுதிமொழிக் குழுவினுடைய தலைவர் அவர்கள்.*